JETIR.ORG ISSN: 2349-5162 | ESTD Year : 2014 | Monthly Issue
JOURNAL OF EMERGING TECHNOLOGIES AND INNOVATIVE RESEARCH (JETIR)
An International Scholarly Open Access, Peer-reviewed, Refereed Journal

# ‘ஒப்பாய்வு நோக்கில் நட்பு’ : திருக்குறளும் திருவிவிலியமும்

**வேளாங்கண்ணி ந.ஆ. (Veilankanni N.A),**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),
திருப்பத்தூர் - 635601, திருப்பத்தூர் மாவட்டம்.

**முன்னுரை**

உயிரினங்களின் வரிசையில் அமைந்த மனிதனை மற்ற உயிர்களிடமிருந்து வேறுபடுத்தியும் உள்ளத்தைப் பண்படுத்தியும் மனிதனாக, அதுவும் மாமனிதனாக மாற்றும் அரிய செயலைச் செய்யவல்ல இலக்கியங்களை நீதி இலக்கியங்கள் அல்லது அற இலக்கியங்கள் எனலாம். தனிமனிதனையும் சமுதாயத்தையும் நன்னெறிப் படுத்தும் செயலை அறஇலக்கியங்கள் செவ்வனே செய்கின்றன. இத்தகைய இலக்கியங்களில் முதன்மையாக விளங்குவது திருக்குறள். இத்திருக்குறளை எழுதிய திருவள்ளுவர் வார்த்தைகளில் சிக்கனம் கொண்டாரே தவிர எண்ணங்களில் சிக்கனம் காணாது வாழ்வியல் கூறுகளையும் முக்காலங்களையும் முன்னிறுத்தி இரண்டடிகளில் உலகத்தையே அறத்தின் வழியில் அடக்கிக் கூறியவர். அதுபோல திருவிவிலியம் ஒரு மதம் சார்ந்த நூலாக இருந்தாலும் அறநெறி மதிப்பீடுகளான அன்பு, நீதி, நட்பு, நம்பிக்கை, மன்னித்தல் இதுபோன்றவற்றின் மூலம் தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் தக்க உதாரணங்களுடன் நுண்ணிய கருத்துகளை மிக எளிதாக எடுத்தியம்புகிறது.

எனவே இந்த இரு நூல்களிலும் **‘நட்பு’** என்னும் கருத்தியல் மட்டும் எவ்வாறு மனிதனை நகர்த்திச் செல்கின்றது? அதற்கான காரணம் என்ன? என்ற கேள்விகளை முன்வைத்து இக்கட்டுரை ஆராயப்படுகிறது.

**திருக்குறளின் அமைப்பு**


திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பெரும் பிரிவுகளில் 133 அதிகாரங்களில் 1330 குறட்பாக்களில் அமைந்துள்ளது. சாதி, மதம், மொழி, இனம், நாடு என்னும் வேற்றுமைகளைக் கடந்த நூலாகக் கருதப்படுகிறது. இந்நூல் தனிமனித ஒழுக்கத்தை மட்டுமல்ல, சமுதாயப் பொதுமனித ஒழுக்கத்தையும் நட்பு, காதல், இல்லறம், துறவறம் போன்ற அனைத்துத் துறைகளிலும் இன்றியமையாத அறம் காக்கும் கருவியாகவும் உலகப் பொதுமறையாகவும் போற்றப்படுகிறது.

**திருவிவிலியத்தின் அமைப்பு**

திருவிவிலியம் ஒரே நூலாகத் தோற்றம் அளித்தாலும் உண்மையில் அது ஒரு தொகுப்புதான். பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்று இரு பெரும் பிரிவுகள் உண்டு. பழைய ஏற்பாட்டில் 46 தனித்தனி நூல்களும் புதிய ஏற்பாட்டில் 27 தனித்தனி நூல்களும் உண்டு. ஆக மொத்தம் 73 நூல்களைக் கொண்ட ஒரு தொகுப்புதான் திருவிவிலியம். இவை வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்டு வெவ்வேறு மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டவை. பழைய ஏற்பாட்டின் தொடக்கநூல் முதல் புதிய ஏற்பாட்டின் கடைசி நூலானத் திருவெளிப்பாடு என்ற நூலின் தொகுப்பே திருவிவிலியம். இந்நூல் கிறிஸ்தவர்களின் வேதநூலாகக் கருதப்படுகிறது. தனிமனிதனுக்கும் சமுதாயத்திற்கும் பலதரப்பட்ட கருத்துகளை அன்பின் அடிப்படையில் எடுத்தியம்புகிறது.

**திருக்குறளில் - நட்பு**

திருக்குறளில் உள்ள நட்பை கீழ்க்காணும் வரைபடம் மூலம் வரையறுக்கலாம்.




வரைபடத்தில் அமைந்துள்ளதுபோல் ஐந்து அதிகாரங்களின் வழியாக ஐம்பது குறள்களில் நட்புப் பற்றி விவாதிக்கிறார் வள்ளுவர். நட்பு என்றால் என்ன? அதை எவ்வாறு செயலாக்கம் செய்வது? உண்மையான நண்பர்கள் யார்? அவர்களை எவ்வாறு இனம் கண்டு கொள்வது? இனம் கண்டு கொண்ட நண்பர்களை எவ்வாறு தக்க வைத்துக்கொள்வது? நட்பினால் வரும் பயன்கள் என்ன? நட்பினால் வரும் தீமைகள் என்ன? எனப் பல்வேறு வினாக்களை எழுப்பி அதற்கானப் பதில்களையும் முன்னெடுக்கிறார் என்ற நிலையில் நட்பு அமைந்துள்ளது.

**திருவிவிலியத்தில் - நட்பு**

திருவிவிலியத்தில் தொடக்கநூல் முதல் திருவெளிப்பாடு வரை நட்பைப் பற்றிய செய்திகள் ஆங்காங்கே இடம் பெற்றிருக்கின்றன. திருக்குறளில் காணப்படுகின்ற தனி அதிகாரங்கள் போல திருவிவிலியத்தில் இல்லை. ஆனால் மேலே குறிப்பிட்ட வினாக்களுக்கு பொருள்தரும் வகையில் நட்பு அமைந்துள்ளது.

**நட்பின் இலக்கணம்**

மனித வாழ்க்கையில் தொப்புள்கொடி உறவுகள், இரத்த உறவுகள், மஞ்சள் கயிறு உறவுகள் என இத்தகைய உறவுகளுக்கு மத்தியில் உயிர்க் கொடி உறவாக தொடர்ந்து வருவது நட்பு என்னும் உறவுதான். நட்பு என்பது எந்தவித இரத்த பாசமும் இல்லாமல் தன் நண்பனுக்காக உயிரைக் கொடுக்கும் அளவிற்குப் பாசம் வைத்து, ஆண், பெண் மற்றும் வயது வித்தியாசமின்றி உள்ளத்தால் ஒத்திருப்பதாகும். நண்பன் துன்பம் தாளாமல் பாளம் பாளமாகப் பிளந்து கிடக்கும் மனதில் ஆழமான அன்பைப் பொழிந்து வாழ்வின் வசீகரத்தை வளர்ப்பதே நட்பு எனலாம். இதனை,

**“முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
**அகநக நட்பது நட்பு”**[1]

இன்முகம் காட்டுவது மட்டும் நட்புக்கு அடையாளமல்ல. மாறாக இதயத்திலிருந்து நேசிப்பதுதான் உண்மையான நட்பு என்று வள்ளுவரும் **“தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிடச் சிறந்த அன்பு யாரிடமும் இல்லை”**[2] என்று உயிரைவிட நட்பு சிறந்தது என இயேசுவும் நட்பின் இலக்கணத்தை வரையறை செய்துள்ளார்கள் என்பதை இரு நூல்களின் வழியாக அறியமுடிகிறது.

**நட்பின் விளக்கம்**

உலகத்தில் வாழ்கின்ற மனிதர்களிடையே சில சமயங்களில் உறவினர்கள், காதலர்கள் கூட இல்லாமல் வாழலாம். ஆனால், நண்பர்கள் இல்லாமல் யாரும் வாழ்வதில்லை என உறுதியாகக் கூறமுடியும். பெற்றோரிடம், கணவன் மனைவியிடம் கூடப் பகிர்ந்து கொள்ள முடியாத சில கருத்துகளை நண்பர்களிடம் கொட்டித் தீர்த்துக் கொள்வார்கள். இதற்கு நல்ல நண்பர்கள் அவசியம். அதேபோல் பல நண்பர்கள் கிடைத்தாலும் அதில் ஒருசிலரே மிக நெருக்கமாகக் காணப்படுவர்.

**"நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்புஇன்றி**
**ஒல்லும்வாய் ஊன்றும் நிலை"**[3]

எத்தகைய வேறுபாடு இன்றி எல்லாச் சூழ்நிலைகளிலும் தன்னால் இயலும் வழிகளில் எல்லாம் துணைநின்று நண்பனைத் தாங்கிப் பிடிப்பதுதான் நட்பின் சிறப்பாகும்.

நட்பினை விளக்குவதற்கு இரண்டு உதாரணங்களைச் சுட்டிக்காட்டுகிறார் வள்ளுவர். நட்பானது பிறை நிலவாகத் தொடங்கி முழு நிலவாக வளரும் என்றும் நூல்கள் படிக்கப் படிக்க இன்பத்தையும் அறிவையும் தருவதுபோல நண்பர்கள் பழகப் பழகத் துன்பத்தைப் போக்கி ஆலோசனை தரக்கூடியவர்களாகவும் இன்பம் தரக்கூடியவர்களாகவும் பண்புடையவர்களாகவும் காணப்படுவார்கள் என்றும் கீழ்க்காணும் குறள்கள் விளக்கம் தருகின்றன.

**"நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்**
**பண்புடை யாளர் தொடர்பு"**[4]

**"நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்**
**பின்னீர பேதையார் நட்பு"**[5]

என்றும் **திருவிவிலியத்தில்** இயேசு தன் சீடர்களைப் பார்த்து **"இனி நான் உங்களைப் பணியாளர் என்று சொல்ல மாட்டேன் ஏனெனில் தம் தலைவர் செய்வது இன்னது என்று பணியாளருக்குத் தெரியாது. உங்களை நான் நண்பர்கள் என்றேன்"**[6] இதன் காரணம் நண்பர்களுக்குள் இருக்கும் நட்பிற்கு எவ்வித உயர்வு, தாழ்வு இல்லை என்று நட்பிற்கு விளக்கம் அளிக்கிறார். இவ்வாறு இரு நூல்களிலும் நட்பிற்கான விளக்கத்தைச் சில உதாரணங்களின் வழியாக அறியமுடிகிறது.

**நல்ல நட்பு நம்மை பயக்கும்**

வாழ்க்கையில் தடுமாறும்போதும் தடம்மாறும்போதும் தோள் கொடுத்துக் காப்பவர்கள் நண்பர்கள்தான். ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தமது இன்ப, துன்பங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு துணை தேவைப்படுகிறது. அவர்கள் காதலர்களாகத்தான் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. மாறாக அவர்கள் நண்பர்களாகவும் இருக்கலாம். ஒருவரையொருவர் புரிந்து கொண்டு, வழி தவறிச் செல்லும்போது அன்புடன் கண்டித்துத் திருத்துவது நல்ல நட்பு எனப்படும் இதனை,

**"நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்**
**மேற்சென்று இடித்தற் பொருட்டு"**[7]

நட்பு என்பது எப்போதும் சிரித்து மகிழ்வது அல்ல. மாறாக நண்பர்கள் நல்வழியிலிருந்து தவறிச் செல்லும்போது கண்டிப்புடன் திருத்துவது உண்மையான நட்பு எனப்படும். இதுபோல **"நண்பர் கொடுக்கும் அடிகள் நல்நோக்கம் கொண்டவை"**[8] மேலும் நட்பு வலுப்பெற பெரியோர்களின் அறிவுரை அவசியம் என்று **"சான்றோரின் அறிவுரை நண்பர்களுக்கு நன்மை பயக்கும்"**[9] என திருவிவிலியத்தின் வழியாக அறியமுடிகிறது. இப்படி நன்மை பயக்கும் நட்பானது எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பதை ஏலாதி கீழ்க்காணும் பாடலை முன்வைத்துப் பேசுகிறது,

**“சாதல், பொருள் கொடுத்தல், இன்சொல், புணர்வு உவத்தல்**
**நோதல், பிரிவில் கவறலே ஓதலின்**
**அன்புடையார்க்கு உள்ளன ஆறு குணம் ஆக,**
**மென்புடையார் வைத்தார் விரித்து”[10]**

1. நண்பர்கள் இறந்த போது பிரிவு தாங்காமல் இறத்தல் 2. நண்பர்களுக்கு வறுமை வரும்போது பொருள் கொடுத்து உதவுதல் 3. இனிய சொற்களைக் கூறுதல் 4. நண்பர்களுடன் கூடியிருத்தல் 5. நண்பர்கள் வருந்தும்போது தானும் வருந்துதல் 6. நண்பர்கள் பிரிய நேர்ந்தால் கவலைப்படுதல் ஆகிய ஆறு குணங்களும் நல்ல நண்பர்களுக்கு அமைந்திருந்தால் இவர்களின் நட்பு எக்காலத்திற்கும் நன்மை பயக்கும் என்பதோடு சிறு அறிவுரையாக **“உன் நண்பரையும் உன் தந்தையின் நண்பரையும் கைவிடாதே”[11]** எனவும் திருவிவிலியம் கூறுவதையும் அறியமுடிகிறது.

**தீய நட்பு தீமை பயக்கும்**

பகைவரின் நட்பு கூடாது (வேண்டாம்) பகைவரின் நட்பை நம்பாமல் இருத்தல் அவசியம். பொய்யான நட்பு சில நாட்களில் வெளிப்பட்டு விடும். அது மனிதர்களை ஏமாற்றிவிடும் என்பதை

**“நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்**
**ஒல்லை உணரப் படும்”[12]**

**“சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்**
**தீங்கு குறித்தமை யான்”[13]**

என்று குறள்கள் வெளிப்படுத்துகின்றன. மேலும், ஒரு வேலை பகைவருடன் பழக நேர்ந்தால் அவர்களிடத்தில் அகத்தளவில் பழகாமல் முகத்தளவில் மட்டும் நட்பு கொண்டு, பின்னர் அந்த நட்பை விட்டு விட வேண்டும்.

**“பகைநட்பாம் காலம் வருங்கால் முகநட்டு**
**அகநட்பு ஒரீஇ விடல்”[14]**

**“மிகச்செய்து தம்எள்ளு வாரை நகச்செய்து**
**நட்பினுள் சாப்புல்லற் பாற்று”[15]**

வெளித்தோற்றத்திற்கு நண்பரைப்போல் நகைமுகம் காட்டி மகிழ்ந்து, உள்ளுக்குள் பகையுணர்வுடன் சிலர் இருப்பார்கள். இத்தகையவர்கள் வணங்குகின்ற போதுகூட அவர்களின் கைக்குள்ளே கொலைக் கருவி மறைந்திருப்பது போலவே, அவர்கள் கண்ணீர் விட்டு அழுத போதும் சதி செயலே அவர்களின் நெஞ்சில் நிறைந்திருக்கும். இப்படிப்பட்டவர்களிடம் நட்பு கொள்வதைத் தவிர்த்து வாழ்தல் அவசியம் என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார். இத்தகைய ஒருமித்தக் கருத்தாக **“கடுஞ்சினம் கொள்பவனோடு நட்புக் கொள்ளாதே எரிச்சல் கொள்பவனோடு தோழமை கொள்ளாதே. அப்படிச் செய்தால் அவர்களின் போக்கை நீயும் கற்றுக் கொள்வாய் உன் உயிர் கண்ணியில் சிக்கிக் கொள்ளும்”[16]** எனத் தீய நட்பு எச்சரிக்கை விடுக்கிறது.

மேலும், தமக்குப் பயன் தருவார்கள் என்று சிலர் நட்பை வளர்த்துக் கொள்வார்கள். ஆனால் அவர்கள் பயன் பெற்றபின் விலைமகளிர்போலும் கள்வர்கள்போலும் பிரிந்து சென்றுவிடுவார்கள். இதுபோன்ற நண்பர்கள் இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன? எனவே, இத்தகையவர்களின் நட்பு இல்லாமல் தனிமையில் இருப்பதே நல்லது என்பதைக் கீழ்க்காணும் மூன்று குறள்கள் தெளிவுபடுத்துகின்றன.

**“உறின்நட்டு அறின்ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை**
**பெறினும் இழப்பினும் என்”[17]**

**“உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது**
**கொள்வாரும் கள்வரும் நேர்”[18]**

**“அமரகத்து ஆற்றறுக்கும் கல்லாமா வன்னார்**

**தமரின் தனிமை தலை”**[19]

இதுபோன்ற நட்புகள் அனைத்தும் தீமை பயக்கும் என்கின்றன. மேலும் **“முட்டிகை போல முனியாது, வைகலும், கொட்டி உண்பாரும் குறடுபோல கைவிடுவர்”**[20] இரும்பை அடிக்கின்ற சுத்தியைப்போலச் சேர்ந்திருக்கும் நாளெல்லாம் தனக்கு இன்னது வேண்டும் எனக் கேட்டுப் பெற்று உண்பார் சிலர். ஆனால் சோதனை நேரும்போது கைவிட்டுக் குறடுபோல் விலகிவிடுவர். ஆகவே, இப்படிப்பட்ட நண்பர்களிடம் நட்பு வைத்துக்கொள்ள வேண்டாமென்று நாலடியார் வலியுறுத்துகிறார். இத்தகையவர்களைக் கண்டு **“நீங்கள் ஏமாந்துபோக வேண்டாம். தீய நட்பு நல்லொழுக்கத்தைக் கெடுக்கும்”**[21] என்று வலியுறுத்துவதோடு **“நண்பர்க்கு எதிராய்ப் புறங்கூறுவோரின் பிள்ளைகளின் கண்களும் ஒளியிழந்துபோம்”**[22] என அச்சுறுத்துவதையும் தீய நட்பு தீமையே பயக்கும் என்பதை அறியமுடிகிறது.

**நட்பிலும் ஆய்வு செய்தல் அவசியம்**

நபிகள் நாயகம் நட்பாராய்தலைப் பற்றிக் கூறுகையில் ஒரு உதாரணத்தைக் கொண்டு நல்ல நட்பு எது? தீய நட்பு எது? என்று விளக்கம் அளிக்கிறார். நல்ல நண்பன் நறுமணப் பொருளை விற்பவன் போன்றவன். தீய நண்பன் இரும்பை உருக்கும் உலையில் உள்ள அடுப்பு ஊதும் குழல் போன்றவன். நறுமணப் பொருளை விற்பவனின் தோழமையால் உங்களுக்கு நிச்சயம் பயன்கள் கிட்டும். நீங்கள் நறுமணப் பொருள்களை வாங்கிச் செல்லலாம் அல்லது அந்த நறுமணப் பொருட்களின் இனிய மணமாவது உங்கள் மீது படும். ஆனால், அடுப்பில் இருந்து வெளிப்படும் தீப்பிழம்பினால் நீங்கள் வெப்பத்தைத்தான் பெறமுடியும். அதிகமாக நெருங்கினால் உங்கள் ஆடையை நெருப்பு எரித்துவிடக்கூடும். எனவே நீங்கள் யாரிடம் நட்பு கொள்கிறீர்கள் என்பதை மிகவும் முக்கியமாக ஆய்ந்தறிய வேண்டும் என்கிறார்.

இதைத்தான் வள்ளுவர் இங்கு ஆழப்படுத்துகின்றார். நண்பர்களைத் தேர்வு செய்வதில் அதிக விழிப்புணர்வும் ஆய்ந்தறிதலும் அவசியம். ஆயிரம் நபர்களிடம் அறிமுகம் நிகழ்ந்தாலும் ஆழமான, அழுத்தமான நட்பிற்கு மூன்றுபேர்கூடத் தேறமாட்டார்கள். சிலரைப் பார்த்ததும் காதல் வரும். ஆனால், நட்பு அப்படி அல்ல ஒருமுறைக்கு இருமுறை நன்கு பழகி ஒருவருக்கொருவரின் குணநலன்களை ஆராய்ந்து அறிந்து நட்பு கொண்டால் அத்தகைய நட்பு இறந்த பின்னும் பேசப்படும். இல்லையெனில் அத்தகைய நட்பு துன்பத்தைத் தரும் ஏன்? மரணத்தையும் விளைவிக்கும் என்று கீழ்க்காணும் குறள்கள் வழியாக விளக்குகின்றார்.

**“நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்**

**வீடில்லை நட்புஆள் பவர்க்கு”**[23]

**“ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை**

**தான்சாம் துயரம் தரும்”**[24]

இவ்வாறு ஒரு நண்பனைத் தேர்ந்தெடுக்கும்போது அவன் நல்லவனா? கெட்டவனா? என்று அவனுடன் பழகிய பிறகு அவனைத் தம் உற்ற நண்பனாக ஏற்றுகொள்வது சாலச் சிறந்தது ஆகும். இதனையே ஔவைப்பாட்டி **“இணக்கம் அறிந்து இணங்கு”**[25] என்று ஆத்திசூடியில் எடுத்தியம்புகிறார். மேலும் **“ஆய்ந்து நட்புகொள்”**[26] என்றும் **“கேடு வருவிக்கும் நண்பர்களுமுண்டு. உடன் பிறந்தாரைவிட மேலாக உள்ளன்பு காட்டும் தோழருமுண்டு”**[27] என்றும் திருவிவிலியத்திலும் கூறப்படுகிறது.

இன்றையச் சூழலில் சிறிய பொருளாக இருந்தாலும் அல்லது மிக விலை உயர்ந்த பொருளாக இருந்தாலும் ஏன்? காய்கறி முதல் கொண்டு கணவன் வரைக்கும் பார்த்துப் பார்த்து ஆய்தறிந்து செயல்படுகின்ற வகையில், அவ்வாறே நண்பர்களையும் தேர்வு செய்யும் போது ஆராய்ந்து அறியவேண்டும் இல்லையேல் இன்னல்கள் வந்து சேரும் என்று பல்வேறு அறநூல்கள் வழியாகவும் பலரின் அனுபங்கள் வழியாகவும் அறிவுறுத்தப்படுகிறது.

**நாள்பட்ட நட்பு நம்பகமானது**

காலங்கள் உருண்டோடிக்கொண்டு இருக்கின்ற நிலையில் புதிய புதிய பல நண்பர்கள் கிடைத்தாலும் பழைய நல்ல நண்பர்களை மறக்க முடியாது. மறுக்கவும் முடியாது என்பதனை திருக்குளில் பழைமை என்ற அதிகாரத்தில் உள்ள குறள்கள் விளக்குகின்றன.

**"பழைமை எனப்படுவது யாதுஎனின் யாதும்**

**கிழமையைக் கீழ்ந்திடா நட்பு"[28]**

**"விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையான்**

**கேளாது நட்டார் செயின்"[29]**

**"எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்துத்**

**தொல்லைக்கண் நின்றார் தொடர்பு"[30]**

பழைமை பாராட்டுவது என்னவென்றால் பழகிய நண்பர்கள், தங்களின் நட்பை அழியாமல் பாதுகாப்பதுதான். மேலும், பழகிய நட்பின் உரிமை காரணமாகத் தமது நண்பர் தம்மைக் கேளாமலே ஒரு செயல் புரிந்து விட்டாலும்கூட நல்ல நண்பராயிருப்பவர், அதனை ஏற்றுக் கொள்ளவே செய்வர். இக்கருத்துகளைத்தான் மேற்காணும் குறள்கள் எடுத்துரைக்கின்றன.

மேலும் தம்முடன் பழகியவர்கள் தமக்கே எதிராக அழிவு தரும் காரியத்தைச் செய்தாலும்கூட அன்பின் அடிப்படையில் நட்பு கொண்டவர், அதற்காக அந்த அன்பை விலக்கிக் கொள்ளமாட்டார். இவ்வாறு தொன்றுதொட்டு உரிமையுடன் பழகிய நட்புறவைக் கைவிடாமல் இருப்பவர்களை இந்த உலகமானது போற்றுகின்றது என்கின்றன கீழ்க்காணும் குறட்பாக்கள்.

**"அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்**

**வழிவந்த கேண்மை யவர்"[31]**

**"கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை**

**விடாஅர் விழையும் உலகு"[32]**

ஆகவே பழைய நட்பு என்பது நம்பகமானது மற்றும் உறுதியானது என்பதை அறியமுடிகிறது.

(ஆங்கிலத்தில் இவ்வாறு கூறுவார்கள் Do you know why God created gap between fingers? Because one day a true frindhip will come and fill those gaps by holding your hand. (இறைவன் எதற்காகக் கைவிரல்களில் இடைவெளிவிட்டுப் படைத்துள்ளார் என்றால் ஒருநாள் கண்டிப்பாக உண்மையான நட்பு உள்ளவர்கள் அந்த இடைவெளியை வந்து நிரப்புவார்கள் அல்லது கைகோர்ப்பார்கள்) இது முற்றிலும் உண்மை. இதனையே திருக்குறளிலும் காண முடிகிறது.

**"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**

**இடுக்கண் களைவதாம் நட்பு"[33]**

அணிந்திருக்கும் உடை, உடலை விட்டு நழுவும்போது எப்படிக் கைகள் உடனடியாகச் செயல்பட்டு அதனைச் சரிசெய்ய உதவுகின்றனவோ அதைப்போல நாள்பட்ட நட்பானாலும் நண்பனுக்கு வரும் துன்பத்தைப் போக்க உடனடியாகத் துடித்து நல்லதைச் செய்வார்கள் என்பதை அறியமுடிகிறது. மேலும் இக்கருத்தை ஆழப்படுத்துகிறது நாலடியார். **"சூட்டுக்கோல் போல, எரியும் புகுவரே, நட்டார் எனப்படுவார்"[34]** நல்ல நண்பராக இருப்பின் தம் நண்பர் தீ புக நேர்ந்தாலும் சூட்கோல் போலத் தீயில் புகுந்து உயிர் விடுவர் என்கிறது.

**நட்பில் மறத்தலும் மன்னித்தலும்**

மனிதனின் உடலமைப்பில் கண்கள், காதுகள், கைகள் மற்றும் கால்கள் என எல்லாமே இரண்டு இரண்டாகத்தான் உறுப்புகள் இருக்கும். ஆனால், இதயம் மட்டும் ஒன்றுதான். காரணம் இன்னொரு இதயத்தைத் தேடி நட்பு கொள்ள இறைவன் இப்படி ஒரு திட்டத்தை வகுத்தான். எனவே, உண்மையான நட்பு என்பது

இதயத்திலிருந்து வெளிப்படக் கூடியது. அதுவே நிரந்தரமானது அது ஒரு கரும்புபோல இருக்கும். அக்கரும்பை எவ்வளவுதான் அடித்துப் பிழிந்தாலும் அதன் சுவை இனிப்பாகத்தான் இருக்கும். அதன் தன்மையிலிருந்து மாறாமல் காணப்படும். அது போலத்தான் எவ்வளவுதான் தவறுகள் செய்தாலும் உண்மையான நட்பு இருந்தால் அந்த நட்பின் தன்மை மாறாமல் மன்னித்து ஏற்றுக்கொள்ளும் என்பதை, **“உன் நண்பருக்கு எதிராக வாளை நீ உருவியிருந்தபோதிலும் நம்பிக்கை இழந்து விடாதே மீண்டும் நட்பு ஏற்பட வழி உண்டு. உன் நண்பருக்கு எதிராகப் பேசியிருந்தாலும் அஞ்சாதே நல்லிணக்கத்துக்கு வழி உண்டு”**[35] என்கிறது திருவிவிலியம். மேலும் மன்னித்தலுக்கு மிகச் சிறந்த உதாரணமாகத் திகழ்ந்தவர் இயேசு. **“தந்தையே இவர்களை மன்னியும் ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை”**[36] என்று தன்னை கொன்றுக் குவித்தவர்களையும் மரணத்துக்காக காட்டிக் கொடுத்தவர்களையும் தன்னை யாரென்று தெரியாது என மறுதலித்தவரையும் மன்னித்து மன்னிப்பின் உச்சத்தை உரக்க நிலைநாட்டினார். இத்தகைய மன்னிப்பைத் திருவள்ளுவர்,

**“ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பம் பொறுத்தார்க்குப்**
**பொன்றுந்த துணையும் புகழ்”**[37]

தனக்குத் தீமை செய்தோரை மன்னிக்காமல் தண்டிப்பவர்க்கு ஒரே ஒரு நாள் மட்டும் இன்பமாக இருக்கும். ஆனால் பொறுமையாக இருந்து மன்னிப்போம் மறப்போம் என்பவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் இன்பமாக இருக்கும். மேலும்,

**“திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து**
**அறனல்ல செய்யாமை நன்று”**[38]

தனக்குத் தீமை செய்தாலும் கூட பதிலுக்குப் பதில் பழிவாங்காமல் மன்னித்தலே சிறந்த நட்பாகக் கருதப்படுகிறது.**”குற்றத்தை மன்னிப்பவர் நட்பை நாடுகிறவர். குற்றத்தைத் திரும்பத் திரும்ப “நினைப்பூட்டுகிறவன் நட்பை முறிப்பான்”**[39] ஆகவே முறிக்கும் நட்பை விடுத்து மன்னிக்கும் நட்பை நாடிப் பிறரோடும் சமூகத்தோடும் நாட்டோடும் உலகத்தோடும் நட்பு கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் உறவுகள் மலர்ந்து சமாதானம் நிலவி நாடுகளுக்கிடையே உள்ள பிரச்சனைகள் தீர்ந்து மகிழ்ச்சியாக வாழ முடியும் என்பதை நட்பின் மூலம் அறிய முடிகிறது. ஆகவே இந்த உலகமே நட்பு என்ற மூன்றெழுத்தால்தான் உருண்டோடுகிறது என்றால் அது மிகையாகாது.

**மதிப்பீடு**

- திருக்குறளில் நட்பு பற்றிய கருத்துகள் ஐந்து அதிகாரங்களில் காணப்படுகிறது. ஆனால் திருவிவிலியத்தில் தனி அதிகாரங்களாக இல்லை. மாறாக ஆங்காங்கே கூறப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.
- நட்பு முகம் பார்த்து அமைவதில்லை. மாறாக அகத்தைப் பார்த்து அமைவதுதான் சிறந்த நட்பாகக் கருதப்படுகிறது.
- நட்பில் பெற்றோரிடம், கணவன் மனைவியிடம் கூடப் பகிர்ந்து கொள்ள முடியாத சில கருத்துகளை நண்பர்களிடம் பகிர்ந்து கொள்ள முடிகிறது.
- உண்மையான நட்பு உயிரைக்கூட கொடுக்கும். ஆனால் தீய நட்பு உயிரையே எடுக்கும் என வலியுறுத்துவதை அறியமுடிகிறது.
- நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதில் கவனமும் ஆய்ந்தறிதல் பண்பும் அவசியம் என்பதை அறியமுடிகிறது.
- மன்னித்தலும் மறத்தலும் நட்புக்கு வலுசேர்க்கிறது என அறியமுடிகிறது.
- இரு நூல்களையும் ஒப்பிட்டு நோக்கும்போது இரு நூல்கள் வெவ்வேறாக இருந்தாலும் நட்புபற்றிய கருத்துகளின் அமைவு பெரும்பாலும் ஒருமித்து இருக்கிறது என அறியமுடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. புலியூர்க் கேசிகன், திருக்குறள் பரிமேலழகர் உரை, ப. 360.
2. யோவான், யோவான் நற்செய்தி, திருவிவிலியம் புதிய ஏற்பாடு, ப. 158.
3. புலியூர்க் கேசிகன், திருக்குறள் பரிமேலழகர் உரை, ப. 361.
4. மேலது, ப. 359.
5. மேலது, ப. 358.
6. யோவான், யோவான் நற்செய்தி, திருவிவிலியம் புதிய ஏற்பாடு, ப. 158.
7. புலியூர்க் கேசிகன், திருக்குறள் பரிமேலழகர் உரை, ப. 359.
8. நீதிமொழிகள், பழைய ஏற்பாடு, திருவிவிலியம், ப. 771.
9. மேலது, ப. 757.
10. க.ப. அறவாணன், புதிய பார்வையில் பதினெண்கீழ்க்கணக்கு. ஏலாதி, ப. 89.
11. நீதிமொழிகள், பழைய ஏற்பாடு, திருவிவிலியம், ப. 771.
12. புலியூர்க் கேசிகன், திருக்குறள் பரிமேலழகர் உரை, ப. 377.
13. மேலது, ப. 378.
14. மேலது, ப. 379.
15. மேலது, ப. 379.
16. நீதிமொழிகள், பழைய ஏற்பாடு, திருவிவிலியம், ப. 767.
17. புலியூர்க் கேசிகன், திருக்குறள் பரிமேலழகர் உரை, ப. 372.
18. மேலது, ப. 372.
19. மேலது, ப. 372.
20. க.ப. அறவாணன், புதிய பார்வையில் பதினெண்கீழ்க்கணக்கு நாலடியார், ப. 186.
21. பவுல், 1கொரிந்தியர், புதிய ஏற்பாடு, திருவிவிலியம், ப. 257.
22. யோபு, யோபு புத்தகம், பழைய ஏற்பாடு, திருவிவிலியம், ப. 610.
23. புலியூர்க் கேசிகன், திருக்குறள் பரிமேலழகர் உரை, ப. 362.
24. மேலது, ப. 363.
25. பத்மதேவன், நீதி நூல் களஞ்சியம், ஆத்திசூடி, ப. 11.
26. சீராக், பழைய ஏற்பாடு, திருவிவிலியம், ப. 1245.
27. நீதிமொழிகள், பழைய ஏற்பாடு, திருவிவிலியம், ப. 763.
28. புலியூர்க் கேசிகன், திருக்குறள் பரிமேலழகர் உரை, ப. 367.
29. மேலது, ப. 368.
30. மேலது, ப. 369.
31. மேலது, ப. 369.
32. மேலது, ப. 370.
33. மேலது, ப. 361.
34. க.ப. அறவாணன், புதிய பார்வையில் பதினெண்கீழ்க்கணக்கு நாலடியார், ப. 186.
35. சீராக், பழைய ஏற்பாடு, திருவிவிலியம், ப. 1269.
36. லூக்கா, லூக்கா நற்செய்தி, புதிய ஏற்பாடு, திருவிவிலியம், ப. 127.
37. புலியூர்க் கேசிகன், திருக்குறள் பரிமேலழகர் உரை, ப. 76.
38. மேலது, ப. 76.
39. நீதிமொழிகள், பழைய ஏற்பாடு, திருவிவிலியம், ப. 762.